ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2021.08.06 |

# காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி[1] – 2021 முதலாம் அரையாண்டு

**முக்கிய விடயங்கள்**

| காணி விலை மதிப்பீட்டுக் குறிகாட்டி | |
|---|---|
| குறிகாட்டிப் பெறுமதி **155.1** | ஆண்டு அதிகரிப்பு **9.5 %** |
| | அரையாண்டு[2] அதிகரிப்பு **6.8 %** |

**காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி ஆண்டுச் சதவீத அதிகரிப்பு**




**காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் புவியியல் உள்ளடக்கம் 2017 முதல்: கொழும்பு மாவட்டம்**




கொழும்பு மாவட்டத்தின் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியானது 2021இன் முதலாம் அரையாண்டு காலப்பகுதியின் போது 155.1இற்கு அதிகரித்தது. காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் 9.5இனைக் கொண்ட ஆண்டு அதிகரிப்பும் 6.8இனைக் கொண்ட அரையாண்டு அதிகரிப்பும் கடந்த இரண்டு ஆண்டுகளாக காணி விலைமதிப்பீட்டு அதிகரிப்புக்களில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கினை திரும்பலடையச் செய்துள்ளன.

காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் அனைத்துத் துணைக் குறிகாட்டிகளும் அதாவது, வதிவிடக் காணி விலைமதிப்பீட்டு குறிகாட்டி, வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி மற்றும் கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி ஆகிய அனைத்தும் ஒட்டுமொத்த அதிகரிப்பிற்குப் பங்களித்துள்ளன. கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி 10.1 சதவீதம் கொண்ட உயர்வான ஆண்டு அதிகரிப்பினையும் பதிவுசெய்ததுடன் அதனைத் தொடர்ந்து வதிவிடக் காணி விலைமதிப்பீட்டுக் குறிக்காட்டியும் வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியும் காணப்பட்டன.

**காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி அசைவுகள் (2017 முதலரை = 100)**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டிகளும் வளர்ச்சி வீதங்களும்**

| கொழும்பு மாவட்டத்திற்கான காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி (தளக் காலப்பகுதி: 2017 1ஆம் அரை) | குறிகாட்டிப் பெறுமதி | | | | | | ஆண்டுச் சதவீத மாற்றம் | | | | அரையாண்டு[2] சதவீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2018 2ஆம் அரை | 2019 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை | 2019 2ஆம் அரை | 2020 1ஆம் அரை | 2020 2ஆம் அரை | 2021 1ஆம் அரை |
| வதிவிடக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 125.0 | 131.4 | 137.9 | 140.7 | 144.4 | 154.2 | 10.4 | 7.1 | 4.7 | 9.6 | 5.0 | 2.0 | 2.6 | 6.8 |
| வர்த்தகக் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 125.9 | 132.2 | 138.8 | 141.6 | 145.1 | 154.0 | 10.3 | 7.1 | 4.5 | 8.8 | 5.0 | 2.0 | 2.5 | 6.1 |
| கைத்தொழில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி | 126.6 | 133.0 | 139.6 | 142.5 | 146.1 | 157.0 | 10.3 | 7.2 | 4.6 | 10.1 | 5.0 | 2.1 | 2.5 | 7.4 |
| **காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி** | **125.8** | **132.2** | **138.8** | **141.6** | **145.2** | **155.1** | **10.3** | **7.1** | **4.6** | **9.5** | **5.0** | **2.0** | **2.5** | **6.8** |

[1] இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்பட்ட காணி விலைச் சுட்டெண் 2019இன் இரண்டாம் அரைப்பகுதியிலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டிருக்கிறது.

[2] இவ்வரையாண்டிற்கான காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியின் சதவீத மாற்றம் முன்னைய ஆண்டின் அரைப்பகுதியுடன் ஒப்பிடப்பட்டது.

## *தொழில்நுட்பக் குறிப்பு:*

***உள்ளடக்கமும் கால இடைவெளியும்***

காணி விலைச் சுட்டெண் கொழும்பு மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கி 1998 இலிருந்து 2008 வரை ஆண்டு அடிப்படையிலும் 2009 இலிருந்து 2017 வரை அரையாண்டு அடிப்படையிலும் தொகுக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து 2017 இலிருந்து புவியியல் உள்ளடக்கம் கொழும்பு மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் விரிவாக்கப்பட்டதுடன் இது 2017இன் முதலரைப்பகுதியைப் பரிசீலனையில் கொண்டு அடிப்படைக் காலமாக மீள்தளப்படுத்தப்பட்டது. 2020 இலிருந்து காணி விலைச் சுட்டெண் காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டி என மீளப்பெயரிடப்பட்டதுடன் அரையாண்டு அடிப்படையில் இது வெளியிடப்பட்டு வருகிறது

***தரவு மூலம்***

பேர்ச் ஒன்றுக்கான வெற்றுக் காணி விலை அரையாண்டு அடிப்படையில் அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

***முறையியல்***

காணிப் பயன்பாட்டின் பல்லினத் தன்மையினைக் கருத்திற்கொண்டும் சீர்மையினைப் பேணும் பொருட்டும் வதிவிட, வர்த்தக மற்றும் கைத்தொழில் காணிகளுக்கான மூன்று துணைக் குறிகாட்டிகளும் பிரதேசத்தில் உள்ள பேர்ச் சராசரி ஒன்றுக்கான சராசரி வெற்றுக் காணி விலையினை பயன்படுத்தி ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிற்கும் வெவ்வேறாகக் கணிப்பிடப்படுகின்றன. காணி விலைமதிப்பீட்டுக் குறிகாட்டியானது இம் மூன்று துணைக் குறிகாட்டிகளினதும் எளிய சராசரியாகும்.